## பாதுகாப்பாக தொடங்குவோம்

# வீட்டில் சாலைப் பாதுகாப்புக் கல்வி

Tamil

### குழந்தைகள் நம் சாலைகளில் பாதுகாப்பாக இருக்க உதவும் கற்றல் அனுபவங்கள்







EARLY LEARNING ASSOCIATION AUSTRALIA

Starting Out Safely

# வீட்டிலிருந்தே சாலைப் பாதுகாப்புக் கல்வி

## குழந்தைகள் நம் சாலைகளில் பாதுகாப்பாக இருக்க உதவும் கற்றல் அனுபவங்கள்

Starting Out Safely

# தெருக்குறியீடுகளை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல்

தெரு குறியீடுகளை உருவாக்குவதும், பயன்படுத்துவதும் குழந்தைகள் சாலை விதிகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கு உதவுகிறது.

18 மாதத்திலிருந்து - 8 வயது

**18 மாதங்கள் முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்கு இந்த அனுபவம் சிறப்பாகச் செயல்படும்.**
வயதில் குறைந்த பிள்ளைகளுக்கு உதவி தேவைப்படும், வயதான பிள்ளைகள் தாங்களாகவே இதைச் செய்ய முடியும்.

### உங்களுக்கு என்ன தேவை

அட்டை (ஒரு பழைய தானிய (cereal) பெட்டி சிறிய குறியீடுகளுக்கு ஏற்றது, பெரிய அட்டை பெட்டி பெரியவற்றுக்கு பயனுள்ளதாக இருக்கும்);

வண்ணங்கள்;

வண்ண குறிப்பான்கள் (markers) மற்றும் / அல்லது வண்ண காகிதம்;

தேவைப்பட்டால் தெரு குறியீடு அட்டைக்கு ஸ்கேல் அல்லது பிற குச்சிகளை பயன்படுத்தலாம்.

### அதை எப்படி செய்வது

உங்கள் சொந்த சாலை குறியீடுகளை உருவாக்கவும் - உட்புறம் விளையாடுவதற்கு அவை பொம்மை கார்களுடன் சிறியதாக இருக்கலாம் அல்லது வெளியே விளையாடுவதற்கு பைக்குகள் அல்லது ஸ்கூட்டர்களுடன் பெரியதாக இருக்கலாம்


குறியீடுகளைப் பற்றி அறிந்துகொள்ள இந்த இணைப்பைப் பயன்படுத்தி வடிவங்களை வரைந்து அலங்கரிக்கவும். உங்கள் அக்கம்பக்கத்தில் நீங்கள் காணக்கூடிய குறியீடுகளையும் நீங்கள் செய்யலாம். உங்கள் குழந்தையுடன் அவர்களுக்கு என்ன பொருளைத் தருகிறது என்று பேசுங்கள்.

சிறிய குறியீடுகளை ரயில் பெட்டிகள் அல்லது கார் தடங்களில் பயன்படுத்தலாம். உங்கள் குழந்தையுடன் விளையாடும்போது நீங்கள் குறியீடுகளைப் பற்றியும் விதிகளைப் பின்பற்றுவது பற்றியும் பேசலாம். *"ஓ, இங்கே பார், இது ஒரு நிறுத்த குறியீடு. நான் இங்கே நிறுத்த வேண்டும்."*

பைக், ஸ்கூட்டர் அல்லது நடைபயிற்சியின் போதும் மற்றும் தோட்டத்தில் ஓடும்போது சுறுசுறுப்பான விளையாட்டுகளின்போது மற்றும் இதர செயல்பாடுகளை ஊக்குவிக்க பெரிய குறியீடுகளை வெளிப்புறத்தில் பயன்படுத்தலாம்.





# தெருக்குறியீடுகளை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல்

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

சாலை விதிகள் மற்றும் குறியீடுகள் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நினைவில் வைக்க உதவுகின்றன.

எப்படி 'நிறுத்து, செல், மெதுவாகச் செல்', இந்த மொழி அவர்களைப் பின்னர் சாலை விதிகளைப் பின்பற்றுவதை ஆதரிக்கிறது - அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

சில பழக்கமான குறியீடுகளுடன் தொடங்குங்கள் - நீங்கள் ஒரு நாள் நடக்கும்போது சிலவற்றைத் தேர்வு செய்து பின்னர் அவற்றை உருவாக்கலாம். உங்கள் குழந்தை அவற்றைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ளும் போது, படிப்படியாக மேலும் பல குறியீடுகளைச் சேர்க்கவும்.

## குழந்தையிடன் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் என்ன பேச வேண்டும்

நீங்கள் வெளியே செல்லும்போது - *"நீங்கள் என்ன போக்குவரத்து குறியீடுகளைப் பார்க்கிறீர்கள்?" "இந்த குறியீடுகள் எதைக் குறிக்கின்றன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"*

அடையாளங்கள் எதற்காக என்பதை விளக்குங்கள் - "நாம் இங்கு நடக்கலாம் என்று இந்த அடையாளம் சொல்கிறது, ஆனால் இருசக்கர வாகனங்களில் ஆட்களும் இருப்பார்கள், நாங்கள் இடதுபுறமாக இருக்க வேண்டும்."

## இந்த செயல்பாட்டை விரிவாக்குவதற்கான வழிகள்

அட்டையிலான கார் மற்றும் போக்குவரத்து குறியீடுகளைப் பயன்படுத்தவும் - அதை எப்படி உருவாக்குவது என்பதை அறிய இணைப்பைப் பார்க்கவும்.

சாலை பாதுகாப்பு இசையைப் பயன்படுத்தி நில், செல், இசை சிலைகளைக்கொண்டு விளையாடுங்கள். நீங்கள் இசையைத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் போக்குவரத்து குறியீடுகளைக் காட்டவும், குழந்தைகள் நிறுத்தவும் செல்லவும் கற்றுக்கொள்ள இவை உதவும்.

## குழந்தைகளுடன் சேர்ந்து பாடும் பாடல்கள்

https://childroadsafety.org.au/parents/road-safety-songs/




## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/parents/parent-resource/




**கேளுங்கள்...**

*"என்ன போக்குவரத்து குறியீடுகளை நீங்கள் பார்க்க முடியும்?"*

*"இந்த குறியீடுகள் எதைக் குறிக்கின்றன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"*

# பொம்மைகளுக்கு தலைக்கவசங்களை உருவாக்குதல்

குழந்தைகளின் பொம்மைகளுக்கு தலைக்கவசம் தயாரிப்பது, குழந்தைகள் சைக்கிள் அல்லது சக்கர வண்டிகளில் செல்லும் போதெல்லாம் தலைக்கவசம் அணிவதைப் பற்றி அறிந்துகொள்ள உதவுகிறது.

18 மாதத்திலிருந்து - 8 வயது

**18 மாதங்கள் முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்கு இந்த அனுபவம் சிறப்பாகச் செயல்படும்.**
வயதில் குறைந்த பிள்ளைகளுக்கு உதவி தேவைப்படும், வயதான பிள்ளைகள் தாங்களாகவே இதைச் செய்ய முடியும்.

## உங்களுக்கு என்ன தேவை

ஒரு எண்ணெய் பாட்டில், தயிர் கொள்கலன் அல்லது ஏதாவதொரு வட்ட வடிவ கொள்கலன்;

ரிப்பன், குழாய் சுத்திகரிப்பான்கள் அல்லது எலாஸ்டிக்;

ஸ்டிக்கர்கள் அல்லது பிற அலங்காரங்கள் (விரும்பினால்).

## அதை எப்படி செய்வது

உங்கள் மறுசுழற்சி சேகரிப்பில் இருந்து உங்கள் குழந்தையின் விளையாட்டுப் பொருட்களின் (ஒரு கரடி, மென்மையான பொம்மை அல்லது பொம்மை) தலைக்கு பொருந்தக்கூடிய கொள்கலனைக் கண்டறியவும்

சில ரிப்பன், எலாஸ்டிக் அல்லது குழாய் சுத்திகரிப்பான்களை சரியான அளவிற்கு வெட்டுங்கள்.

பக்கவாட்டில் சில துளைகளை செய்து, பட்டைகளை புகுத்தி கட்டவும். நீங்கள் அவற்றை ஸ்டேபிள் பின் கொண்டும் பிணைக்கலாம் அல்லது மாஸ்கிங் டேப்பைப் பயன்படுத்தலாம்

தலைக்கவசத்தை அலங்கரிக்கவும்.

உங்கள் பிள்ளைகள் தங்கள் நண்பர்களுடன் அவர்களது சக்கர வண்டிகள் அல்லது பைக்கில் சவாரிக்கு அழைத்துச் செல்லும் போதெல்லாம் தலைக்கவசத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்கவும்.





# பொம்மைகளுக்கு தலைக்கவசங்களை உருவாக்குதல்

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

நாம் சைக்கிள், ஸ்கூட்டர் அல்லது சக்கர வண்டிகளில் பயணிக்கும் போது, நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்க தலைக்கவசம் அணிவது அவசியம்.

விக்டோரியாவில் தலைக்கவசம் அணிவது கட்டாயம், அது சட்டமாகும்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

வீட்டின் பின்புறத்தில் உங்கள் குழந்தை சக்கர வண்டியில் சவாரி செய்யும்போது கூட எப்பொழுதும் தலைக்கவசம் அணிவது, அது அவர்களால் மறக்க முடியாத ஒரு பழக்கமாக மாறும். அவர்கள் தங்கள் சக்கர வண்டி சவாரியை முடித்ததும், தலைக்கவசத்தைக் கழற்றலாம்.

பெரியவர்களும் தலைக்கவசம் அணிவது அவசியம். எப்பொழுதும் ஒரு முன்மாதிரியாக இருப்பது நல்ல பழக்கம்.

நீங்கள் வீட்டின் பின்புறத்தில் ஒரு சவாரி செய்யப் போகிறீர்கள் என்றாலும், எப்போதும் தலைக்கவசம் அணியுங்கள்.

தலைக்கவசங்களின் கீழ் வெயிலுக்கான தொப்பிகள் அணிவது பாதுகாப்பைக் குறைக்கும் - முதலில் உங்கள் தொப்பியைக் கழற்றவும் (தேவைப்பட்டால் சன்ஸ்கிரீன் அணிவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்).

## குழந்தையிடன் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் என்ன பேச வேண்டும்

தலைக்கவசம் அசையாதவாறு இறுக்கமாக இருக்க வேண்டும், எனவே அது உங்கள் தலையின் முன்புறத்தையும் பின்புறத்தையும் பாதுகாக்க வேண்டும், எனவே சரியான அளவிலான தலைக்கவசத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

நாம் எப்பொழுதும் நம் தலையை பாதுகாக்க வேண்டும் மற்றும் நமது நண்பர்களின் தலைகளையும் பாதுகாக்க வேண்டும்.

*"டெடிக்கு ஹெல்மெட் இருக்கிறதா?"* என்று நீங்கள் கேட்டால். நீங்கள் நினைவூட்டாமலேயே உங்கள் குழந்தையும் தன்னுடையதை போடக்கூடும் - இது குழந்தைகளை எப்போதும் தலைக்கவசம் அணிவதை நினைவில் வைக்க ஊக்குவிக்கிறது.

## இந்த செயல்பாட்டை விரிவாக்குவதற்கான வழிகள்

நீங்கள் இதைப் பற்றியும் சிந்திக்கலாம்: பைக் அல்லது ஸ்கூட்டர் பொம்மைக்காக கார் இருக்கை அல்லது பைக் இருக்கையை நீங்களே உருவாக்குவது.

## தலைக்கவசம் அணிவதைப் பற்றிய பாடல்கள்

https://childroadsafety.org.au/wp-content/uploads/2020/06/04-Track-4.mp3

## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/parents/helmets/

https://www.vicroads.vic.gov.au/safety-and-road-rules/road-safety-education/helmet-tips-for-parents-and-carers



**கேளுங்கள்...**

*"டெடி தலைக்கவசம் போட்டிருக்கிறதா?"*

# வீட்டிலிருந்தே சாலைப் பாதுகாப்புக் கல்வி

## குழந்தைகள் நம் சாலைகளில் பாதுகாப்பாக இருக்க உதவும் கற்றல் அனுபவங்கள்

Starting Out Safely

# வரைபடம் தயாரித்தல்

குழந்தைகள் வெளியில் செல்லும்போது எப்படி பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று யோசிக்கவும் திட்டமிடவும் வரைபட உருவாக்கம் உதவுகிறது.

**4 – 8 வயது**

***இந்த அனுபவம்***
**4 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்குச் சிறப்பாகச் செயல்படும்**

### உங்களுக்கு என்ன தேவை

காகிதம் மற்றும் பென்சில்கள், ஃபெல்ட், முனை பேனாக்கள் அல்லது கிரேயான்கள்



### அதை எப்படி செய்வது

நீங்கள் என்ன வரைபடத்தை உருவாக்கப் போகிறீர்கள் என்பதை முடிவு செய்யுங்கள் உங்கள் பிள்ளைக்கு நன்கு தெரிந்த இடத்திலிருந்து தொடங்குங்கள், உதாரணமாக உங்கள் வீட்டிலிருந்து உள்ளூர் கடை அல்லது பூங்காவிற்குச் செல்வது அல்லது உங்கள் குழந்தை தேர்ந்தெடுக்கும் இடத்திற்குச் செல்வது.

முதலில் உங்கள் இடத்தை வரைய உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள், பிறகு உங்கள் குழந்தையிடம் *"நாம் எப்படி அந்த இடத்திற்குச் செல்வது?"* என்று கேளுங்கள்.

உதாரணமாக, *"உங்களால் நம் வீட்டை வரைய முடியுமா?" "மற்றும் பூங்கா?" "நம் இடத்திலிருந்து பூங்காவிற்கு எப்படி செல்வது?" "நீங்கள் எனக்கு ஒரு வரைபடத்தை வரைய முடியுமா?" "பூங்காவிற்குச் செல்வதற்காக தெருவைக் கடக்க பாதுகாப்பான இடம் எங்கே?" "நாம் சாலையைக் கடக்காமல் அங்கு செல்ல முடியுமா?"*

உங்கள் பிள்ளையை குறியீடு காட்டக்கூடிய இடங்கள் (மரங்கள், பூங்காக்கள், கட்டிடங்கள், பாலங்கள்), தெருக்கள், பிற வீடுகள் போன்றவற்றை வரைய ஊக்குவிக்கவும்.

பின்னர், நீங்கள் சேரவேண்டிய இடத்தைக் கண்டுபிடிக்க உங்கள் வரைபடத்தைப் பயன்படுத்தவும்.



# வரைபடம் தயாரித்தல்

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

உங்கள் பிள்ளை அவர்கள் வெளியில் இருக்கும் போது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்திக்க ஊக்குவிப்பது, அவர்களின் உள்ளூர் சமூகத்தைப் பற்றி அறியவும், அவர்கள் பெரியவர்களாகும்போது அவர்களுக்கான வழியைக் கண்டுபிடிக்கவும் உதவும்.

எங்காவது செல்வதற்கான பாதுகாப்பான வழி - வரைபடத்தில் பொருத்தமான இடங்களில், பாதசாரி கடக்கும் இடம் அல்லது போக்குவரத்து விளக்குகளை வரைவதன் மூலம், எங்காவது செல்வதற்கான விரைவான வழியை விட பாதுகாப்பான வழியைப் பற்றி பேசலாம்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

நீங்கள் சேருமிடத்தைக் கண்டறிய வரைபடத்தைப் பயன்படுத்தும்போது, அதிக நேரத்தை ஒதுக்குங்கள். இது ஒரு விரைவான பயணம் அல்ல. நடைபயிற்சி செய்து கொண்டே வரைபடத்தை படிப்பதை விட, நடக்கும்போது எப்போதும் கைகளை பிடித்துக்கொண்டு வரைபடத்தை சரிபார்க்க நின்று படியுங்கள்.

வரைபடத்தை வரையும்போதும், வெளியே செல்லும்போதும், பாதுகாப்பான இடங்களைக் குறிப்பிடவும். உதாரணமாக, காவல் நிலையம், நண்பர் அல்லது உறவினர் வீடு, மழலையர் பள்ளி போன்றவை. உங்கள் பிள்ளைகளுக்கு எப்போதாவது உதவி தேவைப்பட்டால் அவர்கள் யாரிடம் உதவி கேட்கலாம் என்பதைப் பற்றி பேசுங்கள்.

## குழந்தையிடன் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் என்ன பேச வேண்டும்

வரைபடத்தில் எந்தப் பகுதிகள் பாதுகாப்பற்றதாக இருக்கலாம் மற்றும் ஏன் என்பதைப் பற்றி பேசுங்கள்.

அந்த இடங்களுக்குச் செல்லும்போது நீங்கள் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும் என்பதைப் பற்றி பேசுங்கள்.

## குழந்தைகளுடன் சேர்ந்து பாடும் பாடல்கள்

https://childroadsafety.org.au/parents/road-safety-songs/

## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/wp-content/uploads/2020/06/Parent-Resource.pdf



**கேளுங்கள்...**

*"நம் வீட்டிலிருந்து பூங்காவிற்கு எப்படி செல்வது?"*

*"எனக்கு ஒரு நில வரைபடத்தை வரையமுடியுமா?"*

# வீட்டிலிருந்தே சாலைப் பாதுகாப்புக் கல்வி

## குழந்தைகள் நம் சாலைகளில் பாதுகாப்பாக இருக்க உதவும் கற்றல் அனுபவங்கள்

Starting Out Safely

# சாலை பாதுகாப்பு வழிகாட்டும் விளையாட்டு

சாலைப் பாதுகாப்பு வழிகாட்டும் விளையாட்டு என்பது நமது சாலைகளில் பாதுகாப்பாக இருப்பதை விவரிக்கும் வார்த்தைகள் மற்றும் யோசனைகளைப் பற்றி அறிந்துகொள்ளவும் பயன்படுத்தவும் ஒரு வேடிக்கையான வழியாகும்.

3 – 8 வயது

*இந்த அனுபவம்*
3 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்குச் சிறப்பாகச் செயல்படும்

## உங்களுக்கு என்ன தேவை

**காகிதத்தால் செய்யப்பட்ட வண்ண வடிவங்கள் அல்லது சதுரங்கள் தரையில் அல்லது புல்** மீது வைப்பதற்கு (காங்கிரீட் மீது அவற்றை வரைவதற்கு பாதுகாப்பான இடம் இருந்தால், சாக் பீஸ் கொண்டு அதைச் செய்யலாம், ஆனால் தயவு செய்து ஓடு பாதையைத் தவிர்க்கவும்). சுமார் 16 இடங்களுடன் தொடங்கி, உங்கள் பிள்ளை விளையாட்டில் அதிக நம்பிக்கையுடன் இருந்தால் அவற்றை அதிகரிக்கவும்.

**பகடையாக பயன்படுத்த ஒரு கனசதுர வடிவம்.**

**காகிதம் மற்றும் மார்க்கர்கள்.**

**விளையாடுவதற்கு பாதுகாப்பான இடம்.**

## அதை எப்படி செய்வது

விளையாட்டின் நோக்கம் தொடக்கத்திலிருந்து இறுதி புள்ளிக்கு செல்வதாகும்.

**ஒரு புள்ளியில்** START ஐ வைத்து மற்றொன்றில் FINISH ஐ வைக்கவும்.

**6 வழிமுறைகளைக் கொண்ட பகடையை உருவாக்கவும்** முன்னோக்கி, பின்னோக்கி, இடது, வலது, காத்திருந்து செல் ஆகியவை

**வண்ண வடிவங்களை ஒரு கட்ட வடிவில் வைக்கவும்**, அவற்றின் இடைவெளியில் உங்கள் குழந்தை/குழந்தைகள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு எளிதாகச் செல்ல வேண்டும்.

**உங்களுடன் அல்லது மற்றொரு குழந்தையுடன் மாறி மாறி** ஒவ்வொரு குழந்தையும் பகடைகளை உருட்டி அதில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நீங்கள் முன்னோக்கி, பின்னோக்கி, இடது அல்லது வலதுபுறமாக உருட்டினால், சரியான திசையில் ஏதாவது ஒரு இடத்திற்குச் செல்லுங்கள்;

காத்திரு என்பதை நீங்கள் உருட்டினால், அந்த இடத்தை விட்டு அசையக்கூடாது.

நீங்கள் போ என்பதை உருட்டினால், நீங்கள் எந்த திசையிலும் செல்ல முடியும்;

ஏற்கனவே யாராவது நிற்கும் இடத்திற்கு வந்தால், அவர்களுடன் சேர்ந்து நிற்கலாம்.







# சாலை பாதுகாப்பு வழிகாட்டும் விளையாட்டு

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

சாலைப் பாதுகாப்பு மொழியின் முக்கியப் பகுதி வழிகாட்டுதலாகும் - இடப்புறம் மற்றும் வலதுபுறம், காத்திரு மற்றும் செல் என்பது போக்குவரத்தைச் சரிபார்ப்பது பற்றிப் பேசும்போது நாம் எப்போதும் பயன்படுத்தும் சொற்களாகும். இந்த விளையாட்டு குழந்தைகளுக்கு அவற்றைப் பாதுகாப்பாகப் பயிற்சி செய்ய உதவுகிறது.

## நினைவில் கொள்ள வேண்டியவை

**ஓடுபாதைகள் விளையாடுவதற்கு மிகவும் ஆபத்தான இடங்களாக இருக்கலாம்** - தயவு செய்து இந்த விளையாட்டை டெக், வீட்டின் பின்புறம், வேலியிடபட்ட கான்கிரீட் பகுதி அல்லது உட்புறம் போன்ற பாதுகாப்பான இடத்தில் ஆடுங்கள்.

## குழந்தைகளுடன் சேர்ந்து பாடும் பாடல்கள்

https://childroadsafety.org.au/parents/road-safety-songs/

## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/parents/parent-resource/

**எப்படி விளையாடுவது...**

*6 வழிமுறைகளைக் கொண்ட பகடையை உருவாக்கவும் - முன்னோக்கி, பின்னோக்கி, இடது, வலது, காத்திருந்து செல்ல.*

*விளையாட்டின் நோக்கம் தொடக்கத்திலிருந்து இறுதிப் புள்ளிக்கு செல்வதாகும்.*



# சாலை பாதுகாப்பு புதையல் வேட்டை

சாலை பாதுகாப்பு புதையல் வேட்டை என்பது குழந்தைகளின் உள்ளூர் சூழலில் சாலை பாதுகாப்பு கருவிகள் மற்றும் சாலையை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது மற்றும் சாலை பாதுகாப்பு வார்த்தைகள் பற்றி அறிவதற்கு ஒரு வேடிக்கையான வழியாகும்.

3 – 8 வயது

**இந்த அனுபவம்**
**3 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்குச் சிறப்பாகச் செயல்படும்**
வயதில் குறைந்த பிள்ளைகளுக்கு உதவி தேவைப்படும், வயதான பிள்ளைகள் தாங்களாகவே இதைச் செய்ய முடியும்.

## உங்களுக்கு என்ன தேவை

சாலைப் பாதுகாப்பு புதையல் வேட்டை பட்டியல்.

உங்கள் குழந்தையுடன் சேர்ந்து புதையல் வேட்டை ஆடுவதற்கு பெரியவர் ஒருவர்.

## அதை எப்படி செய்வது

நீங்கள் தேடுதலுக்குச் செல்வதற்கு முன், பட்டியலில் உள்ள பொருட்களைப் பற்றி உங்கள் பிள்ளை / பிள்ளைகளிடம் பேசுங்கள். நீங்கள் வேறு என்னென்ன விஷயங்களைக் கண்டுபிடிக்கலாம் - பட்டியலில் உங்கள் சொந்தப் பொருட்களைச் சேர்க்கவும்.

இந்த பொருட்கள் அருகில் இருந்தால் உங்கள் பிள்ளைக்குத் தெரியுமா?

நீங்கள் செல்வதற்கு முன் பொருட்களின் படத்தை வரையவும், அதனால் உங்கள் பிள்ளை அவர்கள் எதைத் தேடுகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் உள்ளூர் பகுதியைச் சுற்றி நடந்து, புதையல் வேட்டை பட்டியலில் உள்ள பொருட்களைத் தேடுங்கள் - நீங்கள் செல்லும்போது அவற்றை டிக் செய்யவும்.

சாலையில் நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்க இந்த விஷயங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதைப் பற்றி பேசுங்கள். எடுத்துக்காட்டாக, நடைபாதை உள்ளது, எனவே நாம் கார்களுக்கு அருகில் சாலையில் நடக்கத் தேவையில்லை, நடைபாதையின் ஓரத்தில் உள்ள வேலி நாம் கடக்கும் முன் போக்குவரத்தை நின்று கவனிக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது, வேக குறியீடுகள் கார்கள் எவ்வளவு வேகமாகச் செல்லும் என்பதைத் தெரிவிக்கின்றன.





# சாலை பாதுகாப்பு புதையல் வேட்டை

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

அவர்களின் உள்ளூர் சூழலில் சாலைப் பாதுகாப்புக் கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது, சாலையை எவ்வாறு பாதுகாப்பாகப் பயன்படுத்துவது, சாலைப் பாதுகாப்பின் சொற்களஞ்சியம்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் பாதுகாப்பாக இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி உங்கள் குழந்தையிடம் பேசுங்கள்.

இந்த விளையாட்டை விளையாடும் போது அல்லது வேறு எந்தச் செயலையும், உங்கள் சமூகத்தில் வெளியில் மற்றும் வெளியே செல்லும் போது பாதுகாப்பாக வைத்திருப்பது, நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

*"இங்கே நடைபாதையில் நிறுத்திவிட்டு, வேகக் குறியைப் பார்ப்போம், அதன் மூலம் தேடுவதில் கவனம் செலுத்தலாம், அதைக் கண்டுபிடித்தவுடன் தொடர்ந்து நடக்கலாம்"* என்று நீங்கள் கூறலாம்.

## குழந்தையிடன் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் என்ன பேச வேண்டும்

*"நமக்கு இது ஏன் தேவை?"*

*"அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க இது எவ்வாறு உதவுகிறது?"*

*"இந்த போக்குவரத்து குறியீடுகளும் கருவிகளும் இங்கு இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/pedestrians/children-as-pedestrians/

**கேளுங்கள்...**

**"நமக்கு இது ஏன் தேவை?"**

**"அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க இது எவ்வாறு உதவுகிறது?"**



# சாலை பாதுகாப்பு புதையல் வேட்டை

| சாலைப் பாதுகாப்புப் பொருள் | அந்தப் பொருளை நீங்கள் வரைந்தது | ✓ ✕ |
| --- | --- | --- |
| நிறுத்து குறியீடு | | |
| நடைபாதை | | |
| பாதசாரி கடக்கும் பாதை | | |
| வேக குறியீடு | | |

# சாலை பாதுகாப்பு புதையல் வேட்டை

| சாலைப் பாதுகாப்புப் பொருள் | அந்தப் பொருளை நீங்கள் வரைந்தது | ✓ ✕ |
|---|---|---|
| ஓடுபாதை | | |
| தடை | | |
| போக்குவரத்து விளக்குகள் | | |
| புகையிரதக்கடவை | | |

# சாலை பாதுகாப்பு புதையல் வேட்டை

| சாலைப் பாதுகாப்புப் பொருள் | அந்தப் பொருளை நீங்கள் வரைந்தது | ✓ ✕ |
|---|---|---|
| பகிரப்பட்ட பைக் / நடைபாதை | | |
| நீங்களே வரையவும் | | |
| | | |
| | | |

# வீட்டிலிருந்தே சாலைப் பாதுகாப்புக் கல்வி

## குழந்தைகள் நம் சாலைகளில் பாதுகாப்பாக இருக்க உதவும் கற்றல் அனுபவங்கள்

Starting Out Safely

# சாலைக் குறியீடு அட்டை விளையாட்டுகள்

சாலைக் குறியீடு அட்டை விளையாட்டை விளையாடுவது, நம் சாலைகளில் நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்க உதவும் குறியீடுகளைப் பற்றி குழந்தைகள் அறிந்துகொள்ள உதவுகிறது இந்த குறியீடுகளுடன் குழந்தைகள் எவ்வளவு அதிகமாக விளையாடுகிறார்ரோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் வெளியில் செல்லும்போது அதன் பொருள் என்ன என்பதை அறிந்து கொள்வார்கள்.

3 – 8 வயது

***இந்த அனுபவம்***
**3 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்குச் சிறப்பாகச் செயல்படும்**

### உங்களுக்கு என்ன தேவை

'நீங்களே வர்ணம் செய்யுங்கள்' பதிப்பிற்கான ஒரு கலர் பிரின்டர் அல்லது கருப்பு மற்றும் வெள்ளை பிரின்டர் அல்லது கருப்பு மற்றும் வெள்ளை பிரின்டர்

அட்டைகள் (தானியம் (Cereal) அல்லது பிஸ்கட் பெட்டி சிறந்தது)

பசை

உங்கள் சொந்த குறியீடுகளுக்கு வண்ணம் பூச தேவையான வண்ண மார்க்கர்கள்

### அதை எப்படி செய்வது

உங்கள் அட்டை டெம்ப்ளேட்டை அச்சிட்டு, தேவைப்பட்டால், வண்ணப் பதிப்பை வழிகாட்டியாகப் பயன்படுத்தி அவற்றை வண்ணம் தீட்டுங்கள்.

அட்டைகளை வெட்டி, அட்டைப் பெட்டி அடிப்பாகத்தில் ஒட்டவும்

கார்டு கேம்களின் வரிசையை விளையாட கார்டுகளைப் பயன்படுத்தவும் - ஸ்னாப், மெமரி, கோ ஃபிஷ்






# சாலைக் குறியீடு அட்டை விளையாட்டுகள்

Starting Out Safely

## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/parents/parent-resource/

### உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

சாலைகளில் பாதுகாப்பாக இருப்பதைப் பற்றி குழந்தைகள் கற்றுக்கொள்வதை ஆதரிக்கும் வார்த்தைகள்.

தெரு குறியீடுகளை எவ்வாறு தெரிந்து கொள்வது மற்றும் அவை எதைக் குறிக்கின்றன.

### உங்கள் பிள்ளையிடம் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் எதைப் பற்றி பேச வேண்டும்

*"இந்த குறியீடு எதைக் குறிக்கிறது"?*

*"இந்த குறியீட்டைக் கண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"*

உங்கள் பிள்ளைக்கு குறியீட்டைக் கண்டறிவதில் சிக்கல் இருந்தால், செயலை விவரிக்கலாம். உதாரணமாக, 'கோ ஃபிஷ்' இல்

*"நாம் மெதுவாக செல்ல வேண்டும் என்று சொல்லும் குறியீடு உங்களிடம் உள்ளதா?"*

### இந்த செயல்பாட்டை விரிவாக்குவதற்கான வழிகள்

வெளியே, வீட்டின் பின் புறத்தில் பைக்குகள் மற்றும் ஸ்கூட்டர்களுடன் பயன்படுத்த உங்கள் சொந்த பெரிய தெரு குறியீடுகளை உருவாக்கவும்.

**கேளுங்கள்...**


***"இந்த குறியீட்டின் அர்த்தம் என்ன?"***


***"இந்த குறியீட்டைக் கண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"***





CHILDREN
STOP
CROSSING





ONLY

RAILWAY
CROSSING


STOP




GIVE
WAY

ONLY


40







40





STOP



ONLY





RAILWAY
CROSSING


GIVE
WAY


CHILDREN
STOP
CROSSING


ONLY



# சீட் பெல்ட் பாதுகாப்பு - ஒரு அட்டை பெட்டி வாகனத்தை உருவாக்குதல்

சீட் பெல்ட்களின் முக்கியத்துவத்தைப் பற்றியும், நாம் காரில் இருக்கும்போது அவை எவ்வாறு நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றன என்பதைப் பற்றியும் குழந்தைகள் அறிந்துகொள்ள, அட்டைப் பெட்டிக் காரை உருவாக்குவதும் பயன்படுத்துவதும் உதவுகிறது.

18 மாதத்திலிருந்து வயது

***இந்த அனுபவம்***
**18 மாதத்திலிருந்து - 4 வயது வரையிலான குழந்தைகளுக்குச் சிறப்பாகச் செயல்படும்.**
வயதில் குறைந்த பிள்ளைகளுக்கு உதவி தேவைப்படும், வயதான பிள்ளைகள் தாங்களாகவே இதைச் செய்ய முடியும்.

## உங்களுக்கு என்ன தேவை

உங்கள் குழந்தை உள்ளே செல்வதற்கு போதுமான பெரிய அட்டைப் பெட்டி
- ஒரு பெரிய நாப்பி (Nappy) பெட்டி சிறந்தது

அட்டைப்பெட்டி வாகனத்தை அலங்கரிப்பதற்கான கலைப் பொருட்கள்
- உங்களிடம் உள்ளதை நீங்கள் பயன்படுத்தலாம்

சீட் பெல்ட்டாக பயன்படுத்த ரிப்பன் அல்லது நீள துணி (அப்சைக்ளிங் டிப் - கீற்றுகளாக வெட்டப்பட்ட பழைய டி-சர்ட்டைப் பயன்படுத்தலாம்).

ஸ்டீயரிங் வீலாகப் பயன்படுத்த ஒரு வட்ட வடிவப்பொருள்
- உதாரணமாக, ஒரு காகிதம் அல்லது பிளாஸ்டிக் தட்டு.

## அதை எப்படி செய்வது

பெட்டியிலிருந்து அடித்தளத்தை வெட்டுங்கள், பக்கங்களை விட்டு விடுங்கள்.

சீட் பெல்ட்டாகப் பயன்படுத்துவதற்கும், பெட்டியில் சில துளைகளைக் குத்தி, ரிப்பனைக் கட்டுவதன் மூலம் காரை மேலே நிறுத்துவதற்கும் நீளமான ரிப்பன் அல்லது டேப்பைப் பட்டைகளாகச் சேர்க்கவும்.

உங்கள் கைவினைப் பொருட்களால் பெட்டியை அலங்கரிக்கவும்.

பிடித்த பொம்மைக்கான கார் இருக்கையாக பின்புறத்தில் ஒரு சிறிய பெட்டியைச் சேர்க்கவும் - பொம்மைக்கான சரியான வகையான இருக்கை பெல்ட்டை மறந்துவிடாதீர்கள்.

உள்ளே நுழையுங்கள், உங்கள் சீட் பெல்ட்டை அணிந்து கொள்ளுங்கள், வெளியே செல்லுங்கள்!

சீட் பெல்ட் மற்றும் கார் இருக்கை பாதுகாப்பு பற்றி பேசுங்கள்.



# சீட் பெல்ட் பாதுகாப்பு - ஒரு அட்டை பெட்டி வாகனத்தை உருவாக்குதல்

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

பாதுகாப்பாக இருப்பதை விவரிக்கும் வார்த்தைகள் மற்றும் சாலைகளில் பாதுகாப்பாக இருப்பதைப் பற்றி குழந்தைகள் கற்றுக்கொள்வதை ஆதரிக்கும் வார்த்தைகள்.

காரில் பாதுகாப்பாக இருக்க ஒவ்வொருவருக்கும் பொருத்தமான சீட் பெல்ட் அல்லது கார் இருக்கை தேவை.

## நினைவில் கொள்ள வேண்டியவை

சாலைப் பாதுகாப்பு மொழியை நாம் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறோமோ, அவ்வளவு அதிகமாக நம் குழந்தைகள் அதைப் பற்றி அறிந்து கொள்வார்கள். இது சாலை விதிகளைப் புரிந்துகொள்வதை எளிதாக்குகிறது மற்றும் சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அவர்கள் வயதாகும்போது எளிதாக்குகிறது.

## குழந்தையிடன் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் என்ன பேச வேண்டும்

*”காரில் இருக்கும் அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறார்களா?”*
*”உங்கள் சீட் பெல்ட்களை அணிந்துள்ளீர்களா?”*
*“செல்வதற்கு பாதுகாப்பானதா? சரி, போகலாம்”.*

நிறுத்து, போ, வேகமாக, மெதுவாக போன்ற கருத்துகளைப் பற்றி விவாதிக்கவும்

உங்கள் குழந்தைக்கான போக்குவரத்து குறியீடுகளை (எங்கள் ஆதாரத்தைப் பார்க்கவும்) உங்கள் குழந்தைக்கு சொல்லி கொடு - நிறுத்து, செல், வழி கொடு, வேகத்தை குறை.

## குழந்தைகளுடன் சேர்ந்து பாடும் பாடல்கள்

https://childroadsafety.org.au/parents/road-safety-songs/

## இந்த செயல்பாட்டை விரிவாக்குவதற்கான வழிகள்

உங்கள் சொந்த தெரு குறியீடுகளை உருவாக்கி, அவற்றை வீட்டினுள் அல்லது வீட்டின் பின் புறத்தில் வைக்கவும். இதை எப்படி செய்வது என்று எங்கள் தெரு குறியீட்டுச் செயல்பாட்டைப் பாருங்கள்.

## பெற்றோர்களுக்கான தகவல்

https://childroadsafety.org.au/cars/child-car-seats/




**கேளுங்கள்...**

***”காரில் இருக்கும் அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறார்களா?”***

***”உங்கள் சீட் பெல்ட்களை அணிந்துள்ளீர்களா?”***

Starting Out Safely

# தள்ளுவண்டியில் குழந்தைகளுடன் நடைப்பயிற்சி செல்வது - நிறுத்து பார் கவனி யோசி

உங்கள் குழந்தை தள்ளுவண்டியில் இருக்கும்போது அவர்களுடன் நடந்து செல்வது, ஒரு பயணியாகப் பாதுகாப்பாக இருப்பதைப் பற்றி அறிந்துகொள்வதற்கும், அவர்கள் வெளியில் செல்லும்போது நிறுத்து பார் கவனி யோசி என்பதைப் புரிந்துகொள்வதற்கும் ஒரு சிறந்த வழியாகும்.

பிறப்பிலிருந்து - 3 வயது

*இந்த அனுபவம்*
**பிறப்பிலிருந்து - 3 வயது வரையிலான குழந்தைகளுக்குச் சிறப்பாகச் செயல்படும்.**

## உங்களுக்கு என்ன தேவை

பாதுகாப்பான பிராம்கள் மற்றும் ஸ்ட்ரோலர்கள்

பாதுகாப்பான பிராம்கள் மற்றும் ஸ்ட்ரோலர்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு இந்த இணைப்பிற்குச் https://www.productsafety.gov.au/products/babies-kids/kids-equipment/prams-strollers செல்லுங்கள்

வாங்குவதற்கான உதவிக்குறிப்புகள் மற்றும் பாதுகாப்பான பயன்பாடு பற்றிய தகவலுக்கு, https://raisingchildren.net.au/babies/safety/equipment-furniture/pram-stroller-safety இங்கு செல்லுங்கள்

உங்கள் குழந்தையை குழந்தை கேரியரில் ஏற்றிச் செல்லும் போதோ அல்லது குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டும் இதைச் செய்யலாம். இருப்பினும், குழந்தை கேரியர்கள் 4 மாதங்களுக்கும் குறைவான குழந்தைகளுக்கு பரிந்துரைக்கப்படவில்லை

மேலதிக தகவல்களுக்கு https://raisingchildren.net.au/newborns/safety/equipment-furniture/baby-carrier-sling-safety இங்கு செல்லுங்கள்

## அதை எப்படி செய்வது

தோள்பட்டைகள் உட்பட, இறுக்கமாகப் பொருத்தப்பட்டிருக்கும் பட்டை - உங்கள் குழந்தையின் தள்ளுவண்டியில் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யவும்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள், ஏன் உங்கள் பிள்ளையை அவர்களின் தள்ளுவண்டியில் கட்டி வைக்கிறீர்கள் என்பதை விளக்குங்கள்.

எப்பொழுதும் குறைந்த தூரமுள்ள அல்லது மிகவும் வசதியான வழியை விட பாதுகாப்பான வழியில் நடக்கவும்.





# தள்ளுவண்டியில் குழந்தைகளுடன் நடைப்பயிற்சி செல்வது - நிறுத்து பார் கவனி யோசி

Starting Out Safely

## உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது

தெருக்களில் பாதுகாப்பாக நடப்பதைப் பற்றி நிறைய மொழிகள் உள்ளன. தெருவின் வெவ்வேறு பகுதிகளின் பெயர்கள், நடைபாதை, போக்குவரத்து விளக்குகள், வேலி போன்றவை.

பாதுகாப்பாக நடப்பதை நீங்கள் தீவிரமாக எடுத்துக்கொள்ளுங்கள் - அது நீங்கள் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும்.

நிறுத்து பார் கவனி யோசி என்ற கருத்தை குழந்தைகள் இந்த வயதில் புரிந்துகொள்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றாலும், அவர்கள் நன்கு அறிந்திருந்தால், அவர்கள் அதை பின்னர் செய்ய நினைவில் கொள்வது எளிதாக இருக்கும்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

ஒரு நல்ல முன்மாதிரியாக இருங்கள் - எனவே உங்கள் பிள்ளைக்கு எப்படிச் செய்வது என்பதைக் காட்டுங்கள்

- பாதசாரி வழிகள் அல்லது போக்குவரத்து விளக்குகள் (கிடைத்தால்) வழியே நடக்கவும் கார்களுக்கு இடையே தெருவை கடப்பதைத் தவிர்க்கவும்.
- பச்சை ஒளி சமிக்ஞை இருக்கும் போது மட்டும் எப்பொழுதும் கடக்க வேண்டும்.
- கடக்குமிடம் இல்லை என்றால், கடக்க பாதுகாப்பான, தெளிவான மற்றும் மிகவும் புலப்படும் இடத்தைத் தேர்ந்தெடுக்கவும்
- எப்பொழுதும் சாலையைக் கடக்கும் முன் இருபுறமும் பார்க்கவும்.
- கடக்கும் முன் தடை மீது கவனம் செலுத்துங்கள் (ஒருபோதும் தொலைபேசியில் பேசவோ அல்லது வேறொருடன் பேசவோ கூடாது).
- ஓடுபாதைகளில் கார்கள் நகர்கிறதா என எப்போதும் சரிபார்க்கவும்.

## குழந்தையிடன் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் மற்றும் என்ன பேச வேண்டும்

நீங்கள் ஏன் தடை அருகில் நிறுத்துகிறீர்கள், ஓடுபாதையில் இருந்து வெளியே வரும் கார்களுக்காக பார்க்கிறீர்கள் மற்றும் அது பாதுகாப்பானது என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள் என்பதைப் பற்றி உங்கள் குழந்தை/குழந்தையுடன் பேசுங்கள் உதாரணத்திற்கு:

*"நான் போக்குவரத்தைப் பார்க்கின்றேன்."*
*"அந்த பைக் வருவதைப் பார்க்கிறீர்களா?"*
*"அவள் மிக வேகமாக சவாரி செய்கிறாள், எனவே நாம் காத்திருப்போம்."*

*"அதைக் கடப்பது பாதுகாப்பானது என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்."*

*"போக்குவரத்து விளக்குகளுக்கு இடையே நடக்கலாம், அங்கே கடப்பது மிகவும் பாதுகாப்பானது."*

*"நாங்கள் தடை அருகே நிறுத்தும்போது, நான் எப்போதும் நின்று போக்குவரத்தைப் பார்ப்பேன்"*

*"எனக்கு பெரிய டிரக் சத்தம் கேட்கிறது, அது எங்கே இருக்கிறது என்று பார்க்கும் வரை காத்திருப்போமா?"*

## குழந்தைகளுடன் சேர்ந்து பாடும் பாடல்கள்

சாலைப் பாதுகாப்பு குறித்து குழந்தைகளுக்குப் பாடல்களைப் பாடலாம். குழந்தைகள் பாடலைப் பலமுறை கேட்டவுடன் கற்றுக்கொள்வார்கள் - ஒரு பாடலைத் தெரிந்துகொள்வது ஒரு பரிச்சய உணர்வை உருவாக்குகிறது, இதனால் குழந்தைகள் வயதாகும்போது, அவர்களால் செயல்களை எப்படி செய்வது என்று கற்றுக்கொள்ள முடியும்

இணைப்பைப் பார்க்கவும்

### பெற்றோர்களுக்கான தகவல்

https://rednose.org.au/article/prams-and-strollers



**கேளுங்கள்...**

*"போக்குவரத்து விளக்குகளுக்கு அருகே நடந்து செல்வோம், அங்கு கடப்பது மிகவும் பாதுகாப்பானது."*
*"கடந்து செல்வது பாதுகாப்பானதா என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்."*

# குறிப்புகள்

**மேலதிக தகவல்களுக்கு** > childroadsafety.org.au

ROAD SAFETY EDUCATION VICTORIA

Starting Out Safely

EARLY LEARNING ASSOCIATION AUSTRALIA

VICTORIA State Government